அலுவலகத்தோடு தொடர்பு கொள்ள முடியும். இரண்டாவது, மாவட்ட எல்லை பெரிதாக இருந்து, தொலைதூரக் கிராமங்கள் இருக்குமானால் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தோடு தொடர்புகொள்ள முடியவில்லை என்ற நிலை இருக்குமேயானால், இதுபோன்ற கருத்து பரிசீலிக்கப்படலாம். ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் கிருஷ்ணகிரியிலும், ஓசூரிலும் வேலைவாய்ப்பு அலுவலகமும், துணை வேலை வாய்ப்பு அலுவலகமும் ஏற்கெனவே இருக்கின்றன. தர்மபுரியில் சுற்றியிருக்கிற பகுதிகளில் இல்லை. இருந்தாலும் உறுப்பினருடைய கோரிக்கை கவனத்தில் கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்படும்.

திரு. கு. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் எதுவும் இல்லாத காரணத்தால் தர்மபுரியிலே ஒரு துணை வேலை வாய்ப்பு அலுவலகம் இயக்க வழி இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக, தர்மபுரி மாவட்டத்தின் தலைநகர் தர்மபுரியில் தொழிற்சாலைகளைத் துவங்க அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்புடைய கேள்வியாக இல்லையென்றாலும், உறுப்பினர் நல்லெண்ணத்துடன் இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பதால், இதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 218, திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. சி. கோபு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

218—

அரியூர் கூட்டுறவு நூற்பாலை

***372—திரு. சி. ஞானசேகரன் :**

திரு. சி. கோபு:

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தாலுகா, அரியூர் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டதை அரசு அறியுமா?

1996 ஆகஸ்ட் 22]

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே;

(அ) மற்றும் (ஆ) : வட ஆற்காடு–அம்பேத்கர் மாவட்டம், அரியூர் கூட்டுறவு நூற்பாலையின் ஒரு பகுதியே தற்பொழுது இயங்கிவருகிறது. நிதி பற்றாக்குறை காரணமாக ஆலையை முழு அளவில் இயக்க முடியவில்லை. எனினும், தொழிலாளர்களுக்கு சுழற்சி முறையில் வேலை அளிக்கப்பட்டும் லே–ஆப் தரப்பட்டும் வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆலை அடிக்கடி மூடப்பட்டு, திறக்கக்கூடிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. பத்து நாட்களுக்கு முன்னாலே மீண்டும் இந்த ஆலை மூடப்பட்டது. மானியக் கோரிக்கை வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னாலே மீண்டும் இந்த ஆலை திறக்கப்பட்டது. இப்படி அடிக்கடி உயிர் வந்துபோய்க்கொண்டே இருக்கிறது. ஆகவே, இந்த ஆலைக்கு நிலையான உயிரை தருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே கூறியதைப் போல, கடந்த 5 ஆண்டு காலத்தில், இந்த ஆலைக்கு 5 கோடி ரூபாய் கொடுப்பதாக உறுதியளித்து, கொடுக்காமலேயே சென்றுவிட்டார்கள். ஆகவே, மாண்புமிகு முதலவர் அவர்கள் தரக்கூடிய 15 கோடி ரூபாயில், 5 கோடி ரூபாயை எங்களுடைய அரியூர் கூட்டுறவு நூற்பாலைக்கு ஒதுக்கித்தந்து, அதற்கு உயிர் பிச்சை அளிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்றும், லே–ஆப் சம்பளத்தை இந்த ஆலையில் கொடுப்பதில்லை. லே–ஆப் சம்பளத்தை மற்ற மில்களில் கொடுக்கிறார்கள். ஆகவே, லே–ஆப் சம்பளத்தைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 30,000 ஸ்பின்டில்கள் அங்கே இருந்தாலும், கடந்த அரசினுடைய நிர்வாகத் தவறின் காரணமாக, 4,000 ஸ்பின்டில்கள்தான் அங்கே இயங்குகிற ஒரு சூழ்நிலை இப்போது இருக்கிறது. கேஷ் கிரடிட் என்ற அளவில் 1.5 கோடி ரூபாய் இருந்தாலும், அதற்குமேல் 12

[1996 ஆகஸ்ட் 22

இலட்சம் ரூபாய் வாங்கப்பட்டு அக்கவுண்ட்ஸ் ஃப்ரீஸ் செய்யப்பட்ட நிலை இன்னொரு பக்கம் இருக்கிறது. உற்பத்தித் திறனிலே தொழிலாளர்களுடைய முறைகேடு வேறு விதமாக இருந்த காரணத்தால், இடையிலே சில பிரச்சினைகள் ஏற்பட்டு அதன் காரணமாக ஸ்ட்ரைக் வந்தது. கடந்த 10-7-1996 முதல் 13-7-1996 வரை-4 நாட்கள் ஸ்ட்ரைக் நடந்த பின்புதான், கடந்த 20-7-1996 அன்று, இரண்டு மாதத்திற்குரிய சம்பளத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டது. 20-7-1996 அன்று சம்பளமும் கொடுக்கப்பட்டது. இப்போது அடிப்படை நடவடிக்கை வேலைகள் அனைத்தும் முறையாகச் சௌத் இந்தியா டெக்ஸ்டைல்ஸ் ரீசர்ச் அஷோசியேசன் பரிந்துரைகளின்படி கூடிய விரைவில் இந்த ஆலை மட்டுமல்ல, அரியூர் கூட்டுறவு நூற்பாலையுடன் மற்ற 17 ஆலைகளும் இந்த மாத இறுதிக்குள் முழுமையாகச் செயல்படுகின்ற அளவுக்கு, அதனுடைய பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. புதிதாக நிர்வாக இயக்குநர்கள் போடப்பட்டு விட்டார்கள். ஒரு சில ஆலைகளுக்கு நிர்வாக இயக்குநர்கள் இளைஞர்களாக டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் செய்ய வேண்டி, ரெவுன்யூ துறையிலிருந்து ஒரு சிலரைக் கேட்டிருக்கிறோம். அவர்களும் தருவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, மானியக் கோரிக்கையில் அறிவித்தபடியே, நிச்சயமாக 18 ஆலைகளும் முழுமையாக ஓடுகின்ற பணியிலே இந்த அரசு தீவிரமாக ஈடுபட்டு நடவடிக்கை எடுத்து செயல்படுத்தி வருகிறது. கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு பேச்சு வார்த்தை நடத்துவது என்று ஏற்கெனவே முடிவு செய்திருக்கிறோம். இதற்கிடையில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பேசி, கேஷ் கிரடிட்டுகளை, டேர்ம் லோனாக மாற்றம் செய்ய வேண்டியக் கட்டாயம் இருக்கிறது. நிச்சயமாக இந்த மாத இறுதிக்குள் 18 நூற்பாலைகளும் முறையாக ஓடும், முறையாக நடைபெறும் என்ற நல்ல தகவலை உங்களுக்கு இந்த அரசின் சார்பில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. கோபு, இருக்கையில் இல்லை. திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

திரு. அ.லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலை மட்டுமல்லாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், 18 நூற்பாலைகளுமே, முந்தைய அரசின் பஞ்சு வாங்குகின்ற கொள்கையினால், ஏராளமான கையூட்டுப் பெற்றக் காரணத்தால், மூடப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே பேட்டைக்கு உட்பட்ட நூற்பாலை மூடக்கூடிய நிலையிலே இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பணம் தந்திருக்கிறார்கள். இருந்தாலும்

1996 ஆகஸ்ட் 22]

அவர்கள் இந்த ஆலைகள் உடனடியாக ஓடுவதற்கு கேஷ் கிரடிட், வரி செலுத்துவதில் சற்று காலம் நீட்டித்து தருதல், 'டான்ஸ்பின்' நிறுவனத்திற்கு தரவேண்டிய கடன்களை சற்று ஒத்திவைத்தல் போன்ற சலுகைகளைக் கேட்கிறார்கள். இப்படிப்பட்ட சலுகைகளைத் தந்து, உடனடியாக இந்த மில்களை எல்லாம் முறையாக ஓட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசு எல்லா நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில், கடந்த மானியக் கோரிக்கை முடிந்த தினத்தில் இருந்து எடுத்து வருகிறது என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 219, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

219—

பரப்பாடியில் கால்நடை மருத்துவமனை

***1199—திரு. எஸ்.வி. கிருஷ்ணன் :**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) நாங்குனேரி தொகுதியில் உள்ள பரப்பாடியில் கால்நடை மருத்துவமனை ஒன்று அமைக்க அரசு அனுமதி வழங்கியும், இதுவரை மருத்துவமனை அமைக்காதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கால்நடை மருத்துவமனை எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) நாங்குனேரி தொகுதி பரப்பாடியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு அனுமதி ஏதும் வழங்கவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். வி. கிருஷ்ணன், இருக்கையில் இல்லை. திரு. லி. அய்யலுசாமி.